**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 -ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 3-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>கருப்பையா</td><td>தொழில் :</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம் :</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி :</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**1.4.2024 OS No. 26/2022 வா.சா.3 கருப்பையா ஆஜர்**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வாதி ஜெயராஜ் இரண்டு லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2-ம் லக்க சொத்து அரசு ஆவணங்களில் சர்கார் புறம்போக்கு என்று உள்ளது என்றால் சரிதான். புலவரைபடத்தில் விநாயகர் கோவில் என்று உள்ளது என்றால் விநாயகர் கோவில் 4 செண்ட் மட்டும்தான் உள்ளது. புல வரைபடத்தில் மொத்த புல எண்ணுமே விநாயகர் கோவில் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. கிராமத்து சார்பாக 2-வது லக்க சொத்தில் வாதியின் ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி அரசுக்கு மனுகொடுத்தன் பேரில் அரசு அதிகாரிகள் காலிபண்ணி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 40 தென்னைமரங்கள் வைத்திருந்தார், பிடுங்கிவிட்டார்கள். பருத்தி விவசாயம் செய்திருந்தார் அதையும் உழுது அழித்துவிட்டார்கள். கொய்யா மரங்கள் சுமார் 20 மரங்கள் இருந்ததை அரசு அதிகாரிகள் பிடுங்கிவிட்டார்கள்.

3. தாவா 2-வது லக்க சொத்தில் எந்த மரங்களும் இல்லை என்றால் சரியல்ல. ஜெயராஜ் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததைதான் அரசு அதிகாரிகள் சிறு சிறு செடிகளை பிடுங்கி சமன் செய்து சென்றார்கள் என்றால் சரியல்ல. தாவா 2-ம் லக்க சொத்தில்தான் கிராம மக்கள் அனைவரும் விநாயகர் கோவில் திருவிழா கொண்டாடுவார்கள் என்றால் அது பொதுகோவில், சாமி கும்பிடுவார்கள். நான் வாதி ஜெயராஜிற்கு பெண் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஜெயராஜின் மாமனார் என்ற அடிப்படையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.